www.Padasalai.Net www.Trbtnpsc.Com

11 - ஆம் வகுப்பு **அடைவுத் தேர்வு – 2023 – 2024** 011109

Time : 1.30 Hrs **உயிரியல்** மதிப்பெண்கள் : 100

## உயிரி – தாவரவியல்

**சரியானவற்றை தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. பின்வருவனவற்றுள் வைரஸ்களைப் பற்றிய சரியான கூற்று எது?
அ) வளர்ச்சிதை மாற்றத்தைக் கொண்டுள்ளன ஆ) நிலைமாறும் ஒட்டுண்ணிகளாகும்
இ) DNA அல்லது RNA வை கொண்டுள்ளன ஈ) நொதிகள் காணப்படுகின்றன
2. கிராம் நேர் பாக்டீரியாக்களைப் பற்றிய தவறான கூற்றைக் கண்டறிக
அ) டெக்காயிக் அமிலம் காணப்படுவதில்லை ஆ) செல் சுவரில் அதிகளவு பெப்டிடோ கிளைகான் உள்ளது
இ) செல் சுவர் ஓரடுக்கால் ஆனது ஈ) லிப்போ பாலிசாக்கரைட்கள் கொண்ட செல் சுவர்
3. ஆர்க்கி பாக்டீரியம் எது?
அ) அசட்டோபாக்டர் ஆ) எர்வினீயா இ) டிரிப்போனிமா ஈ) மெத்தனோ பாக்டீரியம்
4. டெரிடோ∴பைட் களில் கேமீட்டக தாவர சந்ததியைக் குறிப்பது
அ) முன் உடலம் ஆ) உடலம் இ) கூம்பு ஈ) வேர்த்தாங்கி
5. ஒரு ஆஞ்சியோஸ்பெர்ம் தாவரத்தின் ஒற்றை மடிய குரோமோசோம் எண்ணிக்கை 14 எனில் அதன் கருவூண் திசுவில் உள்ள குரோமோசோம் எண்ணிக்கை? அ) 7 ஆ) 14 இ) 42 ஈ) 28
6. ஜிம்னோஸ்பெர்ம்களில் கருவூண் திசு உருவானது
அ) கருவுறுதலின் போது ஆ) கருவுறுதலுக்கு முன் இ) கருவுறுதலுக்குப் பின் ஈ) கரு வளரும் போது
7. கீழ்க்கண்டவற்றில் பல்காய்ப்புத் தாவரம் எது?
அ) மாஞ்சி∴பெரா ஆ) பாம்புசா இ) மியூசா ஈ) அகேவ்
8. பிரையோ∴பில்லம்; டயாஸ்கோரியா- இதற்கு எடுத்துக்காட்டு
அ) இலை மொட்டு, நுனி மொட்டு ஆ) இலை மொட்டு, தண்டு மொட்டு
இ) தண்டு மொட்டு, நுனி மொட்டு ஈ) தண்டு மொட்டு, இலை மொட்டு
9. வெக்ஸில்லரி இதழமைவு இந்தக் குடும்பத்தின் பண்பாகும்
அ) ∴பேபேஸி ஆ) ஆஸ்ட்ரேஸி இ) சொலானேசி ஈ) பிராஸிக்கேசி
10. திரள்கனி இதிலிருந்து உருவாகிறது
அ) பல இணையாச் சூலக் இலை சூலகப்பை ஆ) பல இணைந்த சூலக இலை சூலகப்பை
இ) பல சூலக இலை சூலகப்பை ஈ) முழு மஞ்சரி
11. பல்வேறு வகைப்பட்ட தாவர நோய் எதிர்ப்பு மண்டலத்தின் ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகள் அடங்கிய வகைப்பாடு
அ) வேதிய வகைப்பாடு ஆ) மூலக்கூறு வகைப்பாட்டு அமைப்பு முறை இ) ஊநீர் சார் வகைப்பாடு ஈ) எண்ணியல் வகைப்பாடு
12. ரைபோசோம்களின் இரண்டு துணை அலகுகளும் எந்த அயனி நிலையில் நெருக்கமாகத் தொடர்ந்து சேர்ந்திருக்கும்?
அ) மெக்னீசியம் ஆ) கால்சியம் இ) சோடியம் ஈ) ∴பெர்ரஸ்
13. பல செல்களின் பணிகள் ஒழுங்காகவும் மற்றும் மைட்டாட்டிக் செல் பகுப்பு இருந்தாலும் கூட இவைகளைப் பெற்றிருப்பதில்லை?
அ) பிளாஸ்மா சவ்வு ஆ) சைட்டோபிளாசம் இ) மைட்டோகாண்டிரியா ஈ) கணிகங்கள்
14. செல் சுழற்சியில் G1 நிலையில் வரையறைப்படுத்தப்பட்டால் பெயர் என்ன?
அ) S நிலை ஆ) $G_2$ நிலை இ) M நிலை ஈ) $G_0$ நிலை
15. செல் சுழற்சியின் S நிலையில்
அ) ஒவ்வொரு செல்லிலும் உள்ள DNAவின் அளவு இரண்டு மடங்காகிறது
ஆ) ஒவ்வொரு செல்லிலும் உள்ள DNAவின் அளவு தொடர்ந்து அதே அளவு இருக்கும்
இ) குரோமோசோம்களின் எண்ணிக்கை அதிகமாகும்
ஈ) ஒவ்வொரு செல்லிலும் உள்ள DNAவின் அளவு பாதியாக குறையும்
16. சென்ட்ரோமியர் இதற்கு தேவை அ) படியெடுத்தல் ஆ) குறுக்கே கலத்தல்
இ) சைட்டோபிளாசம் பிளவுறுதல் ஈ) குரோமோசோம்களை துருவப்பகுதி நோக்கி நகர்த்துவதற்கு
17. எதற்கு இடையே ஜோடி சேர்த்தல் (சினாபஸ்) நடைபெறுகிறது
அ) mRNA மற்றும் ரைபோசோம்கள் ஆ) கதிர்கோல் இழைகள் மற்றும் சென்ட்ரோமியர்கள்
இ) இரண்டு ஒத்த குரோமோசோம்கள் ஈ) ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் கேமீட்டு
18. கீழேக்கொடுக்கப்பட்டுள்ள மறைமுக செல் பகுதியை (மைட்டாசிஸ்) கால்சிசின் மூலம் எந்த நிலையில் தடை செய்யலாம்
அ) அனா∴பேஸ் ஆ) மெட்டா∴பேஸ் இ) புரோ∴பேஸ் ஈ) இடைக்கால நிலை
19. கார அமினோ அமிலம் அ) ஆர்ஜினைன் ஆ) ஹிஸ்டிடின் இ) கிளைசின் ஈ) குளுட்டாமைன்
20. கீழ்க்கண்டவற்றை படித்து சரியான விடையைத் தேர்ந்தெடு
(i) எக்ஸார்க் எனப்படுவது மெட்டாசைலத்திற்கு வெளியே புரோட்டோசைலம் அமைந்துள்ளது
(ii) எண்டார்க் எனப்படுவது புரோட்டோசைலம் மையத்தை நோக்கி அமைந்துள்ளது
(iii) சென்ட்ரார்க் எனப்படுவது புரோட்டோசைலத்திற்கு நடுவில் மெட்டாசைலம் அமைந்துள்ளது
(iv) மீஸார்க் எனப்படுவது மெட்டாசைலத்திற்கு நடுவில் புரோட்டோசைலம் அமைந்துள்ளது
அ) i, ii மற்றும் iii மட்டும் ஆ) ii, iii மற்றும் iv மட்டும் இ) i, ii, மற்றும் iv மட்டும் ஈ) இவை அனைத்தும்
21. ஜிம்னோஸ்பெர்ம்களில் சல்லடை செல்களைக் கட்டுப்படுத்துவது எது?
அ) அருகாமையில் உள்ள சல்லடை குழாய் உறுப்பினர்கள் ஆ) ∴புளோயம் பாரன்கைமா செல்கள்
இ) துணைச் செல்களின் உட்கருக்கள் ஈ) அல்புமீனஸ் செல்களின் உட்கருக்கள்
22. இருவிதையிலைத் தண்டில் வாஸ்குலக் கற்றையிலிருந்து இலை இழுவை நீடிக்கப்படும் பொழுது, இலை நரம்பின் வாஸ்குலத் திசுக்கள் எவ்வாறு அமைந்திருக்கும்?
அ) சைலம் மேல்புறத்திலும் ∴புளோயம் கீழ் புறத்திலும் இருக்கும்
ஆ) ∴புளோயம் மேற்புறத்திலும் சைலம் கீழ் புறத்திலும் இருக்கும்
இ) சைலம் ∴புளோயத்தை சூழ்ந்திருக்கும்
ஈ) ∴புளோயம் சைலத்தை சூழ்ந்திருக்கும்
23. வழக்கமாக ஒருவிதை இலை தாவரத்தில் சுற்றளவு அதிகரிக்கப்பதில்லை ஏனென்றால்
அ) செயல்படும் வாஸ்குலக் கேம்பியத்தை கொண்டுள்ளது ஆ) செயல்படும் வாஸ்குலக் கேம்பியத்தை கொண்டிருப்பதில்லை
இ) கேம்பியத்தின் செயல்பாடு தடைசெய்யப்படுகிறது ஈ) அனைத்தும் சரியானவை



CamScanner
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

24. வழக்கமாகக் குப்பித்தக்கை எதிலிருந்து தயாரிக்கப்படுகிறது?
அ) ∴பெல்லம் ஆ) ∴பெல்லோஜென் இ) சைலம் ஈ) வாஸ்குலக் கேம்பியம்

25. விறைப்பழுத்தம் உடைய செல்லில்
அ) DPD = 10 வளி; OP = 5 வளி; TP = 10 வளி ஆ) DPD = 0 வளி; OP = 10 வளி; TP = 10 வளி
இ) DPD = 0 வளி; OP = 5 வளி; TP = 10 வளி ஈ) DPD = 20 வளி; OP = 20 வளி; TP = 10 வளி

26. வறண்ட நிலத் தாவரமான ஒபன்ஷியாவில் எவ்வகை நீராவிப் போக்கு சாத்தியம்
அ) இலைத்துளை நீராவிப்போக்கு ஆ) லெண்டிசெல் நீராவிப்போக்கு இ) க்யூட்டிகிள் நீராவிப்போக்கு ஈ) மேற்கூறிய அனைத்தும்

27. இலைத்துளைத் திறப்பு எதைச் சார்ந்தது?
அ) பொட்டாசியம் அயனியின் உள் நுழைவு ஆ) பொட்டாசியம் அயனியின் வெளியேற்றம்,
இ) குளோரைடு அயனியின் உள் நுழைவு ஈ) ஹைட்ராக்சில் அயனியின் உள் நுழைவு

28. முனக்சின் கருத்தாக்கம் எதை அடிப்படையாகக் கொண்டது?
அ) விறைப்பழுத்தச் சரிவு மற்றும் உள்ளீர்த்தல் விசை காரணமாக உணவு இடப்பெயர்ச்சி அடைதல்
ஆ) விறைப்பழுத்தம் காரணமாக உணவு இடம் பெயர்தல் இ) உள்ளீர்த்தல் விசை காரணமாக உணவு இடம் பெயர்தல்
ஈ) மேற்கூறியவற்றுள் ஏதுமில்லை

29. பொருத்தமான இணையைத் தேர்ந்தெடு:
(1) சிட்ரஸ் நுனியடி இறப்பு-(i)Mo (2)சாட்டைவால் நோய்-(ii)Zn (3) பழுப்பு மையக்கருக்கல் நோய்-(iii)Cu (4)சிற்றிலை நோய்-(iv)B
அ) 1(iii), 2(ii), 3(iv), 4(i) ஆ) 1(iii), 2(i), 3(iv), 4(ii) இ) 1(i), 2(iii), 3(ii), 4(iv) ஈ) 1(iii), 2(iv), 3(ii), 4(i)

30. மீண்டும் இடம்பெயராத தனிமம் எது?
அ) பாஸ்பரஸ் ஆ) பொட்டாசியம் இ) கால்சியம் ஈ) நைட்ரஜன்

31. கூற்று (A): தைலக்காய்டுகளின் உள் இடைவெளியில் அதிகரிக்கும் புரோட்டான் செறிவானது ATP உற்பத்திக்கு காரணமாக உள்ளது
காரணம் (R): PS I இல் காணப்படும் ஆக்சிஜன் வெளியேற்றும் கூட்டமைப்பு தைலக்காய்டு உரையின் மீது ஸ்ட்ரோமாவை நோக்கி காணப்படுவதுடன் $H^+$ அயனிகளை வெளியேற்றுகிறது
அ) கூற்று மற்றும் காரணம் சரி ஆ) கூற்று சரி, காரணம் தவறு இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

32. எவ்வகை பச்சையத்தில் பைட்டால் வால்பகுதி காணப்படுவதில்லை
அ) பச்சையம் A ஆ) பச்சையம் B இ) பச்சையம் C ஈ) பச்சையம் D

33. C3 சுழற்சியில் நுழையும் ஒவ்வொரு CO2 மூலக்கூறுகளுக்கும் தேவைப்படும் ATP மற்றும் NADPH எண்ணிக்கை
அ) 2 ATP + 2 NADPH ஆ) 2 ATP + 3 NADPH இ) 3 ATP + 2 NADPH ஈ) 3 ATP + 3 NADPH

34. ஒரு மூலக்கூறு பைருவிக் அமிலம் முழுவதுமாக ஆக்ஸிஜனேற்றம் அடைந்து உருவாகும் ATP மூலக்கூறுகளின் எண்ணிக்கை
அ) 12 ஆ) 13 இ) 14 ஈ) 15

35. இரண்டு மூலக்கூறு சைக்கோசோலிக் NADH+ H+ ஆக்சிஜனேற்றம் அடையும்போது தாவரங்களில் உருவாகும் ATP மூலக்கூறுகளின் எண்ணிக்கை
அ) 3 ஆ) 4 இ) 6 ஈ) 8

36. கிளைக்காலைசிஸ் மற்றும் கிரப்ஸ் சுழற்சியினை இணைக்கும் இந்தச் சேர்மம்
அ) சக்சினிக் அமிலம் ஆ) பைருவிக் அமிலம் இ) அசிட்டைல் CoA ஈ) சிட்ரிக் அமிலம்

37. கப்பியின் விட்டம் 6 அங்குலம், குறிமுள்ளின் நீளம் 10 அங்குலம் மற்றும் குறி முள் நகர்ந்த தூரம் 5 அங்குலமாக இருந்தால் தாவரத்தின் உண்மையான நீள் வளர்ச்சியைக் கண்டுபிடி
அ) 1.5 அங்குலம் ஆ) 6 அங்குலம் இ) 12 அங்குலம் ஈ) 30 அங்குலம்

38. நீலப்பசும் பாசிகளோடு தொடர்புடைய சரியான கூற்று எது?
அ) நகர்வதற்கான உறுப்புகள் இல்லை ஆ) செல்சுவரில் செல்லுலோஸ் காணப்படுகிறது
இ) உடலத்தைச் சுற்றி மியூசிலேஜ் காணப்படுவதில்லை ஈ) ஃபுளோரிடியன் தரசம் காணப்படுகிறது

39. பின்வருவனவற்றுள் எந்த முறை விதை உறக்கத்தை நீக்க பயன்படுத்தப்படுகின்றன?
அ) விதையுறை செதுக்கீடு ஆ) மோதல் நிகழ்த்துதல் இ) அடுக்கமைத்தல் ஈ) இவை அனைத்தும்

40. தாவரங்களின் விதை உறக்கம் அ) சாதகமற்ற பருவ மாற்றங்களைத் தாண்டி வருதல் ஆ) வளமான விதைகளை உருவாக்குதல்
இ) வீரியத்தைக் குறைக்கிறது ஈ) விதைச் சிதைவை தடுக்கிறது

41. எப்பிரிவு தாவரம் ஓங்கிய கேமீட்டக தாவர சந்ததியைக் கொண்டது?
அ) டெரிடோஃபைட்கள் ஆ) பிரையோஃபைட்கள் இ) ஜிம்னோஸ்பெர்ம்கள் ஈ) ஆஞ்சியோஸ்பெர்ம்கள்

42. ஒளிவினையில் எலக்ட்ரான் ஓட்டத்தின் சரியான வரிசை முறை
அ) PS II, பிளாஸ்டோகுயினோன், சைட்டோகுரோம், PS I, பெர்ரிடாக்ஸின்
ஆ) PS I, பிளாஸ்டோகுயினோன், சைட்டோகுரோம், PS II, பெர்ரிடாக்ஸின்
இ) PS II, பெர்ரிடாக்ஸின், பிளாஸ்டோகுயினோன்சைட்டோகுரோம், PS I
ஈ) PS II, பிளாஸ்டோகுயினோன், சைட்டோகுரோம்,பெர்ரிடாக்ஸின், PS I

43. தவறான இணையைத் தேர்ந்தெடு.
அ) மியூஸா - ஓர் நடு நரம்பு
ஆ) லாப்லாப் - முச்சிற்றிலை அங்கைக்கூட்டிலை
இ) அகாலிஃபா - இலைமொசைக்
ஈ) அலமாண்டா - மூவிலை அமைவு

44. இணைந்த கூலக இலைகள் கொண்ட கூலக வட்டம் இவ்வாறு அழைக்கப்படும்
அ) இணையாச் கூலக இலை கூலகம் ஆ) பலகூலக இலை கூலகம்
இ) இணைந்த கூலக இலை கூலகம் ஈ) மேற்கூறிய எதுமில்லை

45. ஒரு மஞ்சரியில் மலர்கள் பக்கவாட்டில் அடிமுதல் நுனி நோக்கிய வரிசையில் அமைந்திருந்தால், இளம் மொட்டு
அ) அண்மையிலிருக்கும் ஆ) சேய்மையிலிருக்கும் இ) இடைச்செருகப்பட்டிருக்கும் ஈ) எங்குமிருக்கும்

46. மரபுவழி வகைப்பாடு எதனைப் பிரதிபலிப்பதால் மிகவும் விரும்பத்தக்க வகைப்பாடாக உள்ளது அ) ஒப்பீட்டு உள்ளமைப்பியல்
ஆ) உற்பத்தி செய்யப்பட்ட பூக்களின் எண்ணிக்கை இ) ஒப்பீட்டு செல்லியல் ஈ) பரிணாம உறவு முறை

47. இருசமபக்கச்சீர் கொண்ட மலர்கள் அ) சீரோஃபிஜியா ஆ) தெவிஷியா இ) டட்டுரா ஈ) சொலானம்

48. பைலோ ஜெனியை தெரிந்துக் கொள்ள கீழ்க்கண்ட எந்த வரிசைகள் பயன்படுத்தப்படுகிறது?
அ) mRNA ஆ) rRNA இ) tRNA ஈ) HnRNA

49. செல் சுழற்சியின் சரியான வரிசை அ) $S - M - G_1 - G_2$ ஆ) $S - G_1 - G_2 - M$ இ) $G_1 - S - G_2 - M$ ஈ) $M - G - G_2 - S$

50. குன்றல் பகுப்பில் மியாஸிஸ் குறுக்கே கலத்தல் எங்கு ஆரம்பிக்கிறது?
அ) டிப்ளோட்டீன் ஆ) பாக்கிடீன் இ) லெப்டோட்டீன் ஈ) சைக்கோட்டீன்



CamScanner
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

## உயிரி – விலங்கியல்

1. உயிருள்ளவை உயிரற்றவைகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன?
அ) இனப்பெருக்கம் ஆ) வளர்ச்சி இ) வளர்ச்சிதை மாற்றம் ஈ) மேற்கூறிய அனைத்தும்
2. ஒத்த பண்புகளின் தரத்தைப் பெற்ற உயிரினக்குழு ---------- ஆகும்
அ) சிற்றினம் ஆ) வகைப்பாட்டுத் தொகுதி இ) பேரினம் ஈ) குடும்பம்
3. பல்லுயிர் தன்மை என்ற பதத்தைச் சூட்டியவர் யார்?
அ) வால்டர் ரோசன் ஆ) எ. ஜி. டான்ஸ்லே இ) அரிஸ்டாட்டில் ஈ) எபி. டி. காண்டோல்
4. கண்ட அமைப்பு இதன் முக்கியப் பண்பு
அ) வளைத்தசைபுழுக்கள் ஆ) முட்தோலிகள் இ) கணுக்காலிகள் ஈ) குழியுடலிகள்
5. இயற்கையில் மிக அதிக எண்ணிக்கையில் சிற்றினங்களைக் கொண்ட உயிரிகள்
அ) பூச்சிகள் ஆ) பறவைகள் இ) ஆஞ்சியோஸ்பெர்ம்கள் ஈ) பூஞ்சைகள்
6. இவற்றுள் பொருத்தமற்ற இணையைத் தேர்ந்தெடு:-
அ) மனிதர்கள்-யூரியோடெலிக் ஆ) பறவைகள்-யூரிகோடெலிக் இ) பல்லிகள்-யூரிகோடெலிக் ஈ) திமிங்கலம்-அம்மோனோடெலிக்
7. நுமேட்டிக் (காற்றறை கொண்ட) எலும்புகள் காணப்படும் உயிரி
அ) பாலூட்டிகள் ஆ) பறவைகள் இ) ஊர்வன ஈ) கடற் பஞ்சுகள்
8. கனசதுர வடிவ எபிதீலியத்தின் முக்கிய பணி
அ) பாதுகாப்பு ஆ) சுரப்பு இ) உறிஞ்சுதல் ஈ)அ மற்றும் ஆ
9. திசுக்களுக்கிடையில் பொருட்கள் கசிவதைத் தடுக்கும் அமைப்பு
அ) இறுக்கமான சந்திப்புகள் ஆ) ஒட்டும் சந்திப்புகள் இ) இடைவெளி சந்திப்புகள் ஈ) மீள் தன்மை சந்திப்புகள்
10. பிறந்த குழந்தைகளில் உடல் நடுக்கம் ஏற்படுத்தாமல் வெப்ப உற்பத்தி செய்து உடல் வெப்பம் அதிகரிப்பது எதன் மூலம்?
அ) வெள்ளை கொழுப்பு ஆ) பழுப்பு கொழுப்பு இ) மஞ்சள் கொழுப்பு ஈ) நிறமற்ற கொழுப்பு
11. லாம்பிட்டோ மாரிட்டி மண்புழுவின் சிறப்புப் பகுதியான கிளைடெல்லம் காணப்படுவது
அ) 13 முதல் 14 வரை உள்ள கண்டங்களில் ஆ) 14 முதல் 17 வரை உள்ள கண்டங்களில்
இ) 12 முதல் 13 வரை உள்ள கண்டங்களில் ஈ) 14 முதல் 16 வரை உள்ள கண்டங்களில்
12. எதில் திறந்த வகை சுற்றோட்ட மண்டலம் காணப்படுகின்றன
அ) தவளை ஆ)மண்புழு இ) புறா ஈ) கரப்பான் பூச்சி
13. தவளையின் சிறுநீரகம்
அ) ஆர்க்கிநெஃப்ராஸ் ஆ) புரோ நெஃப்ராஸ் இ) மீசோ நெஃப்ராஸ் ஈ) மெட்டாநெஃப்ராஸ்
14. கீழ்வருவனவற்றுள் தவறான கூற்றைத் தேர்வு செய்யவும்:
அ) மண்புழுவில் ஒரு இணை ஆண் இனத்துளை உள்ளது ஆ) மண்புழுவின் இடப்பெயர்ச்சிக்கு நுண்முட்கள் பயன்படுகின்றன
இ) மண்புழுவின் உடற்சுவரில் வட்டத்தசைகள் மற்றும் நீள்தசைகள் உள்ளன
ஈ) டிப்ளோசோல் எனப்படுவது மண்புழு குடலின் ஒரு பகுதியாகும்
15. ஒடி சுருக்குத்தசை எதனைப் பாதுகாக்கிறது?
அ) கல்லீரல் - கணையநாளம் ஆ) பொதுப் பித்தநாளம் இ) கணைய நாளம் ஈ) சிஸ்டிக் நாளம்
16. கீழ்வருவனவற்றுள் எந்த இணை தவறானது?
அ) பெப்சின் - இரைப்பை ஆ) ரெனின் - கல்லீரல் இ) டிரிப்ஸின் - சிறுகுடல் ஈ) டயலின்- வாய்க்குழி
17. சரியான இணைகளை உருவாக்கு:

| வரிசை 1 | வரிசை 2 | |
|---|---|---|
| (P) சிறுகுடல் | - (i) 23 செ.மீ | அ) (P-iv) (Q-ii) (R-i) (S-iii) |
| (Q) பெருங்குடல் | - (ii) 4 மீட்டர் | ஆ) (P-ii) (Q-iv) (R-i) (S-iii) |
| (R) உணவுக்குழல் | - (iii) 12.5 செ.மீ | இ)(P-i) (Q-iii) (R-ii) (S-iv) |
| (S) தொண்டை | - (iv) 1.5 மீட்டர் | ஈ) (P-iii) (Q-i) (R-ii) (S-iv) |

18. அறிக (A): சிறுகுடலைப் போலப் பெருங்குடலும் உறிஞ்சிகள் உள்ளன.
காரணம் (R); நீர் உட்கிரகித்தல் பெருங்குடலில் நடைபெறுகின்றது
அ) A மற்றும் R ஆகியன சரி மேலும் R, A பற்றிய சரியான விளக்கம் ஆகும்
ஆ) A மற்றும் R ஆகியன சரி மேலும் R, A பற்றிய சரியான விளக்கம் அல்ல
இ) A சரி ஆனால் R தவறு ஈ) A தவறு ஆனால் R சரி
19. பூச்சிகளின் சுவாச உறுப்புகள்
அ) மூச்சுக்குழல்கள் ஆ) செவுள்கள் இ) பச்சை சுரப்பிகள் ஈ) நுரையீரல்கள்
20. ஆக்சிஜன் பிரிகை நிலை வளைவின் வடிவமானது
அ) சிக்மாய்டு ஆ) நேர்க்கோடு இ) வளைந்தது ஈ) நீள்சதுர மிகை வளைவு
21. உயிர்ப்புத்திறன் என்பது
அ) மூச்சுக்காற்று அளவு + உட்சுவாச சேமிப்புக் கொள்ளளவு ஆ) மூச்சுக்காற்று அளவு + வெளிச்சுவாச சேமிப்புக் கொள்ளளவு
இ) எஞ்சிய கொள்ளளவு + வெளிச்சுவாச சேமிப்புக் கொள்ளளவு
ஈ) மூச்சுக்காற்று அளவு + உட்சுவாச சேமிப்புக் கொள்ளளவு + வெளிச்சுவாச சேமிப்புக் கொள்ளளவு
22. பத்தி 1இல் நோய்களும் பத்தி 2இல் அதற்கான அறிகுறிகளும் தரப்பட்டுள்ளன. சரியான இணையைத் தேர்ந்தெடு:

| பத்தி 1 | பத்தி 2 | |
|---|---|---|
| (P) ஆஸ்துமா | - (i) அடிக்கடி உருவாகும் மார்புசளி | அ) (P-iii) (Q-ii) (R-i) |
| (Q) எம்ஃபைசீமா | - (ii) காற்று நுண்ணறைகளில் வெள்ளையணுக்கள் குழுமுதல் | ஆ) (P-iii) (Q-i) (R-ii) |
| (R) நிமோனியா | - (iii) ஒவ்வாமை | இ) (P-ii) (Q-iii) (R-i) |
| | | ஈ) (P-ii) (Q-i) (R-iii) |

23. இரத்தம் உறைதலில் பங்கேற்கும் பிளாஸ்மா புரதம் எது?
அ) குளோபுலின் ஆ) ஃபைப்ரினோஜன் இ) அல்புமின் ஈ) சீரம் அமைலேஸ்
24. இதயத்தில் 'டப்' ஒலி இதனால் ஏற்படுகிறது
அ) ஆரிக்குலோ-வென்ட்ரிக்குலார் வால்வுகள் மூடுவதால் ஆ) அரைச்சந்திர வால்வுகள் திறப்பதால்
இ) அரைச்சந்திர வால்வுகள் மூடுவதால் ஈ) ஆரிக்குலோ -வென்ட்ரிக்குலார் வால்வுகள் திறப்பதால்
25. நினைவிழந்த நிலையில் உள்ள ஒரு நோயாளி அவசரச் சிகிச்சைப் பிரிவிற்குக் கொண்டு செல்லப்பட்டு, உடனடியாக இரத்தம் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளார். ஏனெனில் அவரின் இதற்கு முந்தைய அவரின் மருத்துவத் தகவல்களைத் தெரிந்து கொள்ளவோ, அல்லது தற்போது இரத்த வகையை ஆராயவோ நேரமில்லாத நிலையில் எந்த வகை இரத்தம் அவருக்கு கொடுக்கப்படலாம்
அ) A- ஆ) AB இ) O+ ஈ) O-



CamScanner
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

26. கீழ்கொடுக்கப்பட்டுள்ள பணிகளில் எந்தப் பணி முதிர்ந்த இரத்தச் சிவப்பு அணுக்களால் மேற்கொள்ள இயலும்?
அ) புரத உற்பத்தி ஆ) செல் பிரிதல் இ) லிப்பிட் உற்பத்தி ஈ) செயல்மிகு கடத்தல்
27. ஆர்னிதைன் சுழற்சியின் விளைபொருள் யாது?
அ) கார்பன் டை ஆக்ஸைடு ஆ) யூரிக் அமிலம் இ) யூரியா ஈ) அம்மோனியா
28. தவறான இணையைக் கண்டுபிடி:
அ) பௌமானின் கிண்ணம் - கிளாமருலார் வடிகட்டுதல் ஆ) சேய்மை சுருள் நுண்குழல் - குளுக்கோஸ் உறிஞ்சப்படுதல்
இ) ஹென்லேயின் வளைவ - சிறுநீர் அடர்வு ஈ) அண்மை சுருள் நுண்குழல் - $Na^+$ மற்றும் $K^+$ அயனிகள் உறிஞ்சப்படுதல்
29. கீழ்கண்ட எப்பொருள் யூரிக் அமிலத்துடன் இணைந்து சிறுநீரகக்கற்களை உருவாக்குகிறது?
அ) சிலிகேட்டுகள் ஆ) தாது உப்புகள் இ) கால்சியம் கார்பனேட் ஈ) கால்சியம் ஆக்சலேட்
30. சிறுநீரக நுண்குழல்களில் நீர் மீள உறிஞ்சப்படுதலுக்கு உதவும் ஹார்மோன்
அ) கோலிசிஸ்டோகைனின் ஆ) ஆஞ்சியோடென்சின் II இ) ஆன்டி டையூரிட்டிக் ஹார்மோன் ஈ) பான்கிரியோசைமின்
31. தசைகளை உருவாக்கும் அடுக்கு
அ) புறப்படை ஆ) நடுப்படை இ) அகப்படை ஈ) நரம்பு புறப்படை
32. தசைநார்களின் செயல் அலகு
அ) சார்கோமியர் ஆ) சார்கோபிளாசம் இ) மையோசின் ஈ) ஆக்டின்
33. யூரிக் அமிலப் படிகங்கள் சேர்வதால் மூட்டுகளில் வீக்கம் தோன்றுவது
அ) கௌட் ஆ) மயஸ்தீனியா கிரேவிஸ் இ) எலும்புப்புரை ஈ) ஆஸ்டியோமலேசியா
34. முழங்கையின் கூர்மை பகுதி
அ) ஏகுரோமியன் நீட்சி ஆ) ஒலிகிரானன் நீட்சி இ) கிளிநாய்டுகுழி ஈ) இணைவு
35. நரம்பு தூண்டல் கடத்தலின்போது நரம்பு சந்திப்பில் சைனாப்டிக் பைகளிலிருந்து நரம்புணர்வு கடத்திகள் (P) அயனிகளின் (Q) செயல்பாடுகளால் வெளியிடப்படுகின்றன. சரியான விடையைத் தேர்ந்தெடு.
அ) P=அசிட்டைல் கோலைன் Q=Ca++ ஆ) P=அசிட்டைல் கோலைன் Q=Na+ இ) P = GABA Q= Na+; ஈ) P = கோலைன் எஸ்ட்ரேஸ் Q = Ca++
36. மனித மூளையின் எப்பகுதி உடல்வெப்புநிலை கட்டுப்பாட்டுடன் தொடர்புடையது?
அ) சிறுமூளை ஆ) பெருமூளை இ) முகுளம் ஈ) ஹைப்போதலாமல்
37. சுவாச மையம் காணப்படுமிடம்
அ) முகுளம் ஆ) ஹைப்போதலாமஸ் இ) சிறுமூளை ஈ) தலாமஸ்
38. கீழ்கண்டவற்றுள் தொகுதி 1ல் கொடுக்கப்பட்டுள்ள தண்டுவட நரம்புகளையும் தொகுதி 2ல் கொடுக்கப்பட்டுள்ள தகுந்த எண்ணிக்கையையும் பொருத்துக:
தொகுதி 1 தொகுதி 2
(P) கழுத்துப்பகுதி நரம்புகள் - (i) 5 இணை (Q) மார்புப்பகுதி நரம்புகள் - (ii) 1இணை
(R) இடுப்புப்பகுதி நரம்புகள் - (iii) 12 இணை (S) வால் பகுதி நரம்புகள் - (iv) 8 இணை
அ) (P-iv) (Q-iii) (R-i) (S-ii) ஆ)(P-iii) (Q-i) (R-ii) (S-iv) இ) (P-iv) (Q-i) (R-ii) (S-iii) ஈ) (P-ii) (Q-iv) (R-i) (S-iii)
39. ஆக்ஸான் படலத்திற்கிடையேயான மின்னழுத்தம் ஓய்வுநிலை மின்னழுத்தத்தைவிட அதிக எதிர்தன்மையுடையதாகக் காணப்பட்டால் நியூரான் எந்த நிலையில் இருப்பதாகக் கருதப்படும்?
அ) மின் முனைப்பியக்கம் நீக்கம் ஆ) உச்ச மின் முனைப்பியக்கம் இ) மின் முனைப்பியக்க மீட்சி ஈ) உச்சமின் முனைப்பியக்கம்
40. கீழே தரப்பட்டுள்ள இணையில் எது முழுமையான நாளமில்லாச் சுரப்பி இணையாகும்
அ) தைமஸ் மற்றும் விந்தகம் ஆ) அட்ரினல் மற்றும் அண்டகம் இ) பாராதைராய்டு மற்றும் அட்ரினல் ஈ) கணையம் மற்றும் பாராதைராய்டு
41. மனித விந்தகத்தில் விந்தணுவாக்கம் எதனால் கட்டுப்படுத்தப்படுகின்றது?
அ) லூட்டினைசிங் ஹார்மோன் ஆ) ∴பாலிக்கிளைத் தூண்டும் ஹார்மோன்
இ) ∴பாலிக்கிளைத் தூண்டும் ஹார்மோன் மற்றும் புரோலாக்டின் ஈ) வளர்ச்சி ஹார்மோன் மற்றும் புரோலாக்டின்
42. அயோடின் கலந்த உப்பு இதனைத் தடுத்தலில் முக்கியப் பங்காற்றுகிறது
அ) ரிக்கெட்ஸ் ஆ) ஸ்கர்வி இ) காய்டர் ஈ) அக்ரோமெகாலி
43. நோய்த்தடைகாப்புடன் தொடர்புடைய சுரப்பி எது?
அ) பீனியல் சுரப்பி ஆ) அட்ரீனல் சுரப்பி இ) தைமஸ் சுரப்பி ஈ) பாராதைராய்டு சுரப்பி
44. ஒரு கருவுற்ற பெண் குழந்தையை பெற்றுள்ளார் அக்குழந்தை குட்டையான வளர்ச்சி, மூளை வளர்ச்சி குறைபாடு, குறைந்த அறிவாற்றல் திறன், இயல்புக்கு மாறான தோல் ஆகிய அறிகுறிகளால் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணம்
அ) குறைந்த அளவு வளர்ச்சி ஹார்மோன் ஆ) தைராய்டு சுரப்பியில் புற்றுநோய்
இ) பார்ஸ் டிஸ்டாலில் மிகை சுரப்பு ஈ) உணவில் அயோடின் பற்றாக்குறை
45. கீழ்வருவனவற்றுள் மண்புழு உர உற்பத்தியில் தொடர்பற்றது எது?
அ) மண் வளத்தைப் பாதுகாத்தல் ஆ) கனிமப் பொருட்களை சிதைத்தல்
இ) துளைகள், காற்றோட்டம் மற்றும் ஈரப்பதத்தை தக்க வைத்தல் தன்மை போன்றவற்றை அளிக்கின்றது.
ஈ) உயிரியல் சிதைவுக்குட்படாத கரிமங்களை சிதைக்கின்றது
46. எரிபட்டு ..............................லிருந்து பெறப்படுகின்றது.
அ) லேஸ்ஸி∴பெர் லேக்கா ஆ) நொசிமா பாம்பிசிஸ் இ) அட்டாகஸ் ரிசினி ஈ) அட்டாகஸ் மைலிட்டா
47. கூற்று : கலவிப்பறப்பு ஒரு இராணிதேனீயுடன் பல ஆண் தேனீக்கள் பறந்து செல்லும் ஒரு சிறப்பான பறத்தல் நிகழ்வு ஆகும்.
காரணம் : இராணித்தேனீ ∴பெரோமோன் எனும் ஹார்மோன் வேதிப்பொருளை உற்பத்தி செய்கின்றது. அவ்விடத்தில் உள்ள ஆண் தேனீக்கள் ∴பெரோமோனால் கவரப்பட்டு புணர்ச்சி நடைபெறுகின்றது
அ) கூற்றும் காரணமும் சரி ஆனால் ஒன்றுடன் ஒன்று சரியாக தொடர்புப்படுத்தப்படவில்லை
ஆ) கூற்றும் காரணமும் தவறு ஆனால் சரியாக தொடர்புப்படுத்தப்பட்டுள்ளன
இ) கூற்றும் காரணமும் சரி மற்றும் சரியாக தொடர்புப்படுத்தப்பட்டுள்ளன
ஈ) கூற்றும் காரணமும் தவறு மற்றும் சரியாக தொடர்புப்படுத்தப்படவில்லை
48. தேனீ வளர்ப்பு இவ்வாறு அழைக்கப்படுகிறது.
அ) செரிகல்சர் ஆ) லேக்கல்சர் இ) வெர்மிகல்சர் ஈ) ஏபிகல்சர்
49. அக்குவாபோனிக்ஸ் என்ற தொழில்நுட்பமானது
அ) மீன் வளர்ப்பு மற்றும் நீர் உயிரி வளர்ப்பு ஆ) நீர் உயிரி வளர்ப்பு மற்றும் மண்ணில்லா தாவர வளர்ப்பும் இணைந்தது ஆகும்.
இ) மண்புழு வளர்ப்பும் நீர் உயிரி வளர்ப்பும் இணைந்தது ஈ) இறால் வளர்ப்பு மற்றும் நீர் உயிரி வளர்ப்பும் இணைந்ததாகும்
50. சரியாக பொருத்தப்பட்டுள்ள இணையை தேர்வு செய்
அ) முட்டையிடுபவை - பிரம்மா
ஆ) கறிக்கோழி வகை - லெக்ஹார்ன்
இ) இருவகை - வெள்ளை பிளைமத்ராக்
ஈ) அலங்கார வகை - சில்க்கி



CamScanner

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com